1971 டிசம்பர் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. என் டென்னிஸ் : இதுபோன்ற பொது நிறுவனங்களுக்கு இத்தகைய காரியங்களுக்காக நிதி வழங்க அரசாங்கம் திட்டம் ஏதாவது வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கோவையில் நடைபெற்ற மாநாட்டின்போது மாநில சமூக நல வாரியத்தின் தலைவர் அவர்கள் இப்படி ஒரு கட்டடம் நிறுவுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். எந்த அளவிற்கான கட்டடத்திற்கு போகிறார்கள் என்ற செயற்குறிப்பு அனுப்பாமல் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அனுப்பிய பிறகு அதுபற்றி பரிசீலனை செய்து கட்டடத்திற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த சோஷியல் வெல்பேர் போர்டு ஆபீஸ் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறபடியால் கட்டடம் கட்டுவதற்கு தற்போது பணம் கொடுத்து உதவுவதற்கு இயலாவிட்டாலும் அரசாங்க அலுவலகங்கள் இருக்கிற கட்டடத்தில் ஒரு பகுதியையாவது ஒதுக்கிக் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவசியம் என்று கருதினால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம்.

வெல்லம் முதலியவை விற்க உரிமம்

* 362 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெல்லம், கண்டசாரி சர்க்கரை இவைகள் விற்பதற்கு லைசென்ஸ் தேவை இல்லையென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டின் தேவையை விட அதிகமான அளவில் வெல்லம் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்ற அளவில் அதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய செயல்முறைகள் ஏதாவது எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்கு வெல்லம் அனுப்பப்படுவது உண்மைதான். அதிகமாக உற்பத்தியாகியிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

திரு. த. சோனையா : வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்திற்கு வியாபாரிகளிடமிருந்து ஏதாவது விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.